# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS.No.239/2024

dated : 28.10.2025

P.W. 2

Name முருகன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 18.03.1976ல் பிறந்தேன். யார் வாதியாகவும், யார் மீது என்ன பரிகாரத்திற்காக வழக்கு போட்டுள்ளார்கள் என்றும் தெரியும். வாதிக்கு சொத்து வேண்டுமென்று வழக்கு போட்டுள்ளார். மேற்படி சொத்து கலாவிற்கு பூர்விகமாக பாத்தியப்பட்டது. கலாவின் தந்தை பெயர் ஞாபகமில்லை. பின்னர் சாட்சி கூறுகிறார் திருமலைமுத்து. அவர் 2019ம் ஆண்டில் இறந்திருக்கக்கூடும் தேதி ஞாபகமில்லை. திருமலைமுத்து நாடார் இறக்கும்போது வாதிகள் பிரதிவாதிகள் கூட்டாகவே வசித்தார்கள். நான் வெங்கடேசபுரம் காந்தி நகர் வடக்கு தெருவில் குடியிருக்கிறேன். திருமலைமுத்து நாடார் ஊருக்கு மேற்புறம் உள்ள ஊர்கணக்கு தெரு என்ற இடத்தில் வசித்தார். என் வீட்டிற்கும் திருமலைமுத்து நாடார் வீட்டிற்கும் இடையே 1 1/2 கி.மீ. தொலைவு இருக்கும் என்றால் சரியல்ல 1 கி.மீ. தொலைவு இருக்கும். நான் படித்துக் கொண்டிருக்கும்போதே படிப்பை நிறுத்திவிட்டு சென்னைக்கு சென்றுவிட்டேன்.

நான் 2010 ம் ஆண்டு ஊருக்கு திரும்பிவிட்டேன். நான் 2020 ம் ஆண்டுதான் ஊருக்கு திரும்பினேன் என்றால் சரியல்ல. எனக்கு ஆதார் அடையாள அட்டை, வாக்காளர் அடையாள அட்டை சென்னை முகவரில் வழங்கப்பட்டது என்றால் சரிதான் தற்போது மாற்றிவிட்டேன். 2015 ம் ஆண்டு அவ்வாறு மாற்றினேன். திருமலைமுத்துவின் தந்தை பெயர் மாடசாமி. அவருக்கு எத்தனை மனைவி, மக்கள் என்று தெரியாது. திருமலைமுத்து வயோதிகம் காரணமாக இறந்துபோனார். அவர் இறக்கும்போது சுமராக 69 முதல் 70 வரை இருக்கும். திருமலைமுத்து விவசாய விலை பொருட்களை விற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர் வியாபாரம் செய்து வந்தார் என்றும் அதில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு வழக்குரைச் சொத்துக்களை கிரையம் பெற்றார் என்றும் சொன்னால் சரியல்ல. திருமலைமுத்து நாடார் பூர்விக சொத்துக்களை தெரியும் அவர் சொத்துக்கள் வாங்கிய விவரம் எனக்கு தெரியாது. திருமலைமுத்து நாடார் சொத்து பரிமாற்றம் தொடர்பான ஆவணங்களில் நான் சாட்சி கையொப்பம் எதுவும் செய்யவில்லை. திருமலைமுத்து நாடாருக்கு சுமார் 7 ஏக்கர் நிலம் இருந்தது. அதில் நெல் விவசாயம் செய்தார். அந்த 7 ஏக்கர் நிலமும் புஞ்சை என்றால் சரிதான். எனக்கு அதனருகில் ஒரு ஏக்கர் நிலம் உள்ளது. என்னுடைய நிலத்தின் புல எண் ஞாபகமில்லை. 2 ம் பிரதிவாதி வழக்குரைச் சொத்துக்களை 2000 ஆண்டுமுதல் 2010 ம் ஆண்டு வரை வழக்குரைச் சொத்துக்களை தன்னுடைய தனிச் சொத்தாக அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. கலாவின் வாதியின் உரிமையை மறுத்து தன்னுடைய தனிச் சொத்தாக

அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. வாதி பிரதிவாதிகளுடன் திருமலைமுத்து இறக்கும்வரை கூட்டாக அனுபவித்தார். வாதிக்கு வேறு சில சொத்துக்களை விற்று திருமணம் நடத்தி வைக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. திருமலைமுத்துவின் குடும்ப விவரங்கள் பற்றி எனக்கு நேரில் தெரியாது. இவ்வழக்கை தாக்கல் செய்ய நான்தான் தூண்டுதலாக இருந்தேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் கூறிய விவரங்கள் என்னால் கூறப்பட்ட விவரங்கள் ஆகும். திருமலைமுத்துவின் பூர்விக சொத்துக்கள் வருமானம் ஏதும் இல்லாத சொத்துக்கள் என்றால் சரியல்ல. பள்ளியில் படிக்கும்வரை நானும், 2 ம் பிரதிவாதியும் நண்பர்கள் என்றால் சரிதான். 2020 ல் மகேந்திரனிடம் நான் பணம் கேட்டேன் என்றும் அவர் தர மறுத்துவிட்டார் என்பதால் தூண்டிவிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் சொத்தின் அருகில் உள்ள நிலம் மற்றும் அவர் குடியிருந்து பூர்விக வீடு பற்றி தெரியும் வேறு சொத்துக்கள் பற்றி எனக்கு தெரியாது. வாதி கேட்டுக் கொண்டதன் பேரில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.10.28 17:29:03 +0530